**ஊருடன் கூடி வாழ் எனும் பழமொழியைக் குறிக்கும் வாக்கியங்களுக்கு 😊 என அடையாளம் இடுக.**

1. இபான் மக்களின் கலாசாரங்களை நாங்களும் பின்பற்றி நடந்தோம்.
2. சரவாக் மாநிலத்தில் குடியேறிய நாங்கள் அங்கு வாழும் மக்களின் வாழ்க்கை முறையைப் பின்பற்றி மதித்தோம்.
3. பல இன மக்கள் வாழும் நாட்டில் புரிந்துணர்வு அவசியமற்றது.
4. இன வேறுபாடு பாராமல் தேசியச் சேவை பயிற்சியில் மாணவர்கள் ஈடுபட்டனர்.
5. நொரிடா, திலகம், சிம் மோய் மூவரும் ஒருவரை ஒருவர் மதித்து நடக்கும் சிறந்த மாணவர்கள்.
6. கண்மணியின் குடும்பத்தினர் இபான் மக்களின் பாரம்பரியத்தை மதித்து நடந்தனர்.
7. அண்டை வீட்டுக்காரர்களான கமலம், மே லிம், நோராய்னி ஆகிய மூவரும் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்வதைத் தவிர்ப்பார்கள்.
8. சபா மாநிலத்தில் பணிபுரியும் அண்ணன் அங்குள்ள வாழ்க்கை முறையைப் பின்பற்றி வாழ்கிறார்.
9. பல இனத்தவருடன் சேர்ந்து ஒரே வாடகை வீட்டில் வசிக்கும் தொழிலாளர்கள் ஒற்றுமையாகவும் ஒருவரை ஒருவர் மதித்தும் வாழ்கின்றனர்.
10. சபா மாநிலத்திற்கு மாறிச் சென்ற மாமாவின் குடும்பத்தினர் அங்கு வாழும் மக்களோடு இணைந்து வாழ இயலவில்லை.

LIVEWORKSHEETS